வீடியோ/புகைப்பட சேவை,
பாஸ்போட்,
அடையாள அட்டை,
வர்ண புகைப்படங்கள்
24 மணி நேர துரித சேவை
கே. எஸ். ஆர்.
போட்டோஸ்,
இல. 12A,
கந்தபுராண வீதி,
சந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,
(சி-1240)

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கே. எஸ். ஆர்.
போட்டோஸ்
★ வீடியோ புகைப்பட சேவை
★ ஸ்ருடியோ படப் பிடிப்பு 24 மணி நேர துரித சேவை.
இல. 766,
கே. கே. எஸ். வீதி, (இணை)
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-1240)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 16 வெள்ளிக்கிழமை (30 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 216

## புல்மோட்டையில் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல்

### 6 படையினர் கொல்லப்பட்டனர்

திருகோணமலையில் புல்மோட்டையில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை புல்மோட்டையில் ஜீப் ஒன்றில் இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த போது அது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச்சிதறியது.

புல்மோட்டை 23 ஆம் கல்லில் வைத்து நடத்தப்பட்ட இக் கண்ணி வெடித்தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

திரியாய் இராணுவ முகாமில் இருந்து 700 யார் தொலைவில் வைத்து நேற்றுக் காலை 10 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (இ-4-3)

முச்சந்திமுரளி



முன்னரே தெரிந்திருந்தே இந்தக் கதி என்றால்......?

## பாதுகாப்பு நிறைந்த எந்த ஒரு ராணுவ முகாமையும் புலிகளால் தாக்க முடியும்

### மண்டைதீவு தாக்குதல் குறித்து ஏ.எவ்.பி செய்தியாளர்

கொழும்பு, ஜூன் 30

மிகப் பாதுகாப்பு நிறைந்த எந்த ஒரு இராணுவ முகாமையும் புலிகளினால் தாக்க முடியும்.

மண்டைதீவுத் தாக்குதல் குறித்து பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் ஏ எவ் பி செய்தியாளர் அமால் ஜெயசிங்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கேள்வி:- மண்டைதீவு இழப்புக் குறித்து இராணுவத்தினதும், அரசியல்வாதிகளினதும் வெளிப்பாடு எப்படி இருக்கும்?

பதில்:- ஆரம்பத்தில் அவர்களால் எந்தப் பதிலும் கூற முடியவில்லை. இராணுவத்துக்கு இத்தகைய பேரிழப்பு ஏற்பட்டது குறித்து எத்தகைய விளக்கத்தை அவர்களால் தரமுடியும்?

எமக்கு தகவல் தரும் இராணுவ வட்டாரங்களின்படி, இந்தத் தாக்குதல் குறித்து—குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட முகாமை புலிகள் தாக்க இருப்பது குறித்து—24 மணி நேரத்துக்கு முன்னரே இராணுவத்துக்கு அது பற்றிய தகவல் தெரிந்திருந்தது எனவே இத்தாக்குதலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மண்டைதீவு முகாம் தகர்ப்பில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 150க்கு அதிகம்

## வித்துடல்கள் தாங்கிய ஊர்திப் பவனி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 30

மண்டைதீவு இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த எட்டு வேங்கைகளில் ஆறு பேரின் வித்துடல்களைத் தாங்கிய ஊர்திப் பவனி இன்று நடைபெறவுள்ளது.

லெப்டினன்ட் சேனல் குட்டி, கப்டன் எழில்செல்வன் அல்லது ஜவான், இரண்டாம் லெப்டினன்ட் இசையழகன் அல்லது இறிஸ்சி, மேஜர் தமிழ்மாறன் அல்லது கஜேந்திரன், லெப்டினன்ட் அகிலன், வீரவேங்கை பாமினி ஆகியோரது வித்துடல்களே மக்கள் அஞ்சலிக்காக இன்று ஊர்திப் பவனியாக எடுத்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

மண்டைதீவுத் தாக்குதலில் வீரச்சாவடைந்த எட்டு வீர வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் தோரணங்கள், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

குடாநாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களிலும் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. தமிழீழதேசியக் கொடியும் பல இடங்களில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. [இ-155-117-31]

## உயிரிழந்தோரில் மூவர் அதிகாரிகள்

கொழும்பு, ஜூன் 30

மண்டைதீவு இராணுவ முகாமை நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நிர்மூலமாக்கிய தாக்குதலில் ஸ்ரீ லங்காப் படையின் மூன்று அதிகாரிகள் உயிரிழந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்த அதிகாரிகள் மூவரில் ஒருவர் கப்டன் கீர்த்தி சிறி குணவர்த்தனா ஆவார்.

இவர் லீவு எடுக்காமல் கடந்த பத்து ஆண்டுகளாக இராணுவத்தில் தொடர்ந்து பணியாற்றி வந்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. [உ-3]

## புலிகளை திசை திருப்ப படையினர் தந்திரம்?

### பூநகரியில் முன்னேற முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 30

நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் பூநகரி இராணுவ முகாமில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலால் முறியடிக்கப்பட்டது.

இதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே. ஏனையோர் பழைய நிலைக்கு தப்பி ஓடினர்.

அன்று அதிகாலை விடுதலைப் புலிகள் மண்டைதீவில் நடத்திய தாக்குதலை திசை திருப்பும் நோக்குடன் இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இத்தாக்குதலில் 2 ஆம் லெப்டினன்ட் ஈழச்செல்வி (பங்கோராசா மகேஸ்வரி — வவுனியா) என்ற பெண் போராளி வீரமரணமடைந்தார். [இ-3]

## இராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 30

நேற்று முன்தினம் மண்டைதீவு இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தகர்த்த தாக்குதலில் பலியான ஸ்ரீலங்காப் படையினரின் எண்ணிக்கை 150 க்கும் அதிகம் என தற்போது தெரியவந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா படையினருக்கு ஏற்பட்ட இந்தப் பேரழிவு இராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செய்தி ஏஜென்ஸிகள் பலவும் இத்தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை நூறு முதல் நூற்றியைம்பது வரை இருக்கும் எனத் தகவல் வெளியிட்டன.

இந்தியப் பத்திரிகைகள் செய்தி நிறுவனங்கள் நூற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மண்டைதீவு திரும்பி பதுங்குகுழிகளில் நிலைகொண்டனர்

### அரச தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

புலிகளின் தாக்குதலின் போது சிதறி ஓடிய படையினர் இப்போது தளத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் என்றும்—

அவர்கள் மண்டைதீவில் பதுங்கு குழிகளில் தற்போது நிலைகொண்டுள்ளனர் என்றும் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தினர் அப்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்துவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவில் படையினரின் சடலங்கள் மேலும் மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இறந்த படையினரின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி அகில இந்திய வானொலி நேற்று செய்தி வெளியிட்டது. (இ-3-4)

## போர் நிறுத்தத்திற்கு பின் நடந்த மிக மோசமான தாக்குதல்

### சரத் முனசிங்கா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 30

மண்டைதீவில் நடத்தப்பட்ட தாக்குதல் போர் இடைநிறுத்தம் முறிவடைந்த பின்னர் புலிகளினால் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதல் ஆகும்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மண்டைதீவில் புலிகள் நடத்திய தாக்குதல் தகுந்த முன்வேற்பாட்டுடன் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்.

புலிகள் யாழ். — மண்டை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிறந்த உளவுப்படை வைத்திருந்தும் இராணுவம் கோட்டைவிட்டுவிட்டது

மணிலா, ஜூன் 30

மண்டைதீவுத் தாக்குதல் குறித்து விமர்சகர்கள் வியப்படைந்துள்ளனர் என சொல்லப்படுகிறது.

வழக்கமாக முன்கூட்டியே திட்டமிட்டு செயற்படும் இராணுவம் மிகச் சிறந்த உளவுப் படையைக் கொண்டிருந்தும் இப்பாரிய தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தது குறித்து விமர்சகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர் என்று வெரித்தாஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் குறித்து முன்பே தகவல் கிடைத்ததாக ராணுவம் கூறுகிறது

### ஆனால் அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை

லண்டன், ஜூன் 30

மண்டைதீவு மீது [illegible] தல் நடக்கலாம் என்று உள வுத்துறை மூலம் [illegible] வல்கள் முன்பே வந்திருந்த [illegible] னது. ஆனால் அதை அவர் [illegible] தடுக்க முடியவில்லை. தக்கபடி பதிலடி கொடுக்க முடியவில்லை ராணுவத்தில் உள்ள பலவீனத்தை

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈழப்போரில் அமெரிக்க தலையீட்டுக்கு ஆட்சேபம்

### சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 30

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கான அமெரிக்க ஆதரவை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சியின் 150 க்கு மேலான உறுப்பினர்கள் 26 ஆம் திகதி சென்னையில் உள்ள அமெரிக்க கொன்சல் ஜெனரல் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

டாக்டர் எஸ். ராமதாஸ், பேராசிரியர் தீரன், பொதுச் செயலாளர் தமிழ்எழில் மலை ஆகியோர் ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்தனர்.

''தமிழ்ப் பிரச்சினையில் உன்னுடைய மூக்கை நுழைக்காதே! அது ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை'' என்றகோஷம் ஒரு சுலோகப் பலகையில் எழுதப்பட்டிருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெப்பிட்டிக்கொலாவவில் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நேற்று முன்தினம் அநுராதபுரம் மாவட்டம் ஹெப்பிட்டிக் கொலாவ பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

மதவாச்சி ஹெப்பிட்டிக் கொலாவ வீதியில் கல்லாவை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் ரி 56 - 1 ரகத் துப்பாக்கிகள் — 7, ஏ. கே. துப்பாக்கி ரவைக் கூடுகள் — 27, அதற்குரிய ரவைக்கூடு தாங்கி அணி — 7 நடுத்தர ரவைகள் — 778, பொறிவுக் குண்டுகள் — 4, பொலீஸ் செட் — 1, சப்பாத்து, தொப்பி ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## மலேரியா தடுப்பு அதிகாரி மதவாச்சியில் சூட்டுக்கு பலி!

கொழும்பு, ஜூன் 30

மதவாச்சி மலேரியா தடுப்பு பிரிவில் அதிகாரியாகக் கடமையாற்றிய நடராஜா கந்தசாமி (வயது 53) என்பவர் கடந்த திங்கள் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ தினம் நகரின் மத்தியில் உள்ள தமது வீட்டில் இரவு தமது சகாக்கள் இருவருடனும் இருந்த சமயம் திடீரென அவர் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக காமினி என்ற நபரை மதவாச்சி பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ-5)

## யாழ். ஆஸ்பத்திரி சம்பவம் அமைச்சின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

நேற்று முன்தினம் மாலை 5 30 மணியளவில் மண்டைதீவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது யாழ். போதனா வைத்தியசாலை மீது துப்பாக்கிச் சன்னங்கள் வீழ்ந்த விவகாரம் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்.

அதேசமயம் இந்த விடயத்தை யாழ். ஆஸ்பத்திரி அதிகாரிகள் சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (இ-3-4)

## இரவு நேரம் வீடுகளில் தங்க அஞ்சும் குருநகர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி குருநகர் கடற்கரையோரப் பகுதி மக்கள் இரவு நேரங்களில் வேறு இடங்களில் தங்கிவருகின்றனர்.

அதேவேளை குருநகர் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் பலர் நேற்றும் மீன்பிடிக்கச் செல்லவில்லை. (இ-4)

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றன

மட்டக்களப்பின் முதுபெரும் எழுத்தாளர் பித்தனின் சிறுகதைத் தொகுதி "பித்தன் கதைகள்", பிரபல எழுத்தாளர் அ. செ. முருகானந்தனின் "மீன் குஞ்சுகள்" மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். மலிவு விலையுடன் தொடர்பு கொள்ளுங்கள். [சி-1566]

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் தேர்வுக்கான வினாப்பத்திரம் 1, வினாப்பத்திரம் 2க்குரிய பொதுவிவேகம், பொதறிவு வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [37173]

### தேவை

5-10 KVA மின்பிறப்பாக்கி (Generator) அல்லது 5-10 KVA டைனமோ தேவை. தொடர்புகொள்க: "புறொமோட்டேர்ஸ்", 844, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி-1570)

### மணப்பெண் தேவை

படித்த குடும்ப பெற்றோர் யாழ்ப்பாணத்தில் உத்தியோகம் பார்க்கும் 35 வயது, விசாகம் 3, 7இல் செவ்வாய், உயரம் 5 அடி, 8 அங். மகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகிறார்கள். சிவந்த நிறம், வயது 30க்குள் விரும்பத்தக்கது. இல. 806, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37287]

### தவறிவிட்டது

28-6-95 யாழ். பிள்ளையார் விரோரின் அருகில் ஷெல் விழுந்த இடத்தில் சுமார் 6000/- ரொக்கமும், அடைவு ரசீதும் தவறின்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். R விஜயராஸ்வரன், சிற்றுண்டிசாலை, இல. 33, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் தரப்படும் (37284)

20-6-95 இரவு யாழ்ப்பாணத்துக்கும் கிளாலிக்கும் இடையில் சாவகச்சேரி - கச்சாய் வீதியில் ஒரு பவுண் சைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நா. தனபாலசிங்கம், ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் ஒப்படைக்கவும். சன்மானம். வழங்கப்படும். [37277]

### மாணவர் பதிவு

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகள் பெற்றோர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களாக தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம். இதற்கான விரிவுரைகள் இலவசமாக நடத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (37285)

### கண்டீர்களா?

கைதடிக்கும் சாவகச்சேரி கச்சாய் வீதி மக்கள் கடைக்கும் இடையில் கறுப்பு பிரேமிட்ட மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, "விமலாஸ்" கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-1564]

### படுமோசமான சுழிபுரம் வீதி

சுழிபுரம் பிரதான வீதி, படுமோசமான நிலையில் உள்ளது. வீதியின் இரு கரைப் பகுதிகளாலுமே மக்கள், வாகனப் போக்குவரத்து நடைபெறுகிறது. இதனால் தினமும் விபத்துகள் ஏற்படுகின்றன. (க-28)


**ROYAL INSTITUTE**
(மானிப்பாய்)
மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்
**SPOKEN ENGLISH By Mr. BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்: 01-07-1995
சனி 4 00 p m
[37269]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார் மடியில்: 15 — 01 — 1973

மண்ணின் மடியில்: 13 — 07 — 1991

### வீரவேங்கை லெப்டினன்ட் கஜன்
[செல்வன் சின்னையா சிவரத்தினம்]

திதி: வளர்பிறை துதியை
30 - 06 - 1995

எரிகின்ற தாயகத்தின் மீட்பிற்காய் களம்
குதித்தாய் உறுமி நின்று போர் புரிந்தாய்
எறிகணைகள் மத்தியிலே இடை நடுவில்
வீழ்ந்தனையே எம் இதயக் கோயிலிலே
குடி கொண்ட இளங் கொழுந்தே!

உமக்கு எமது அஞ்சலிகள்

அளவெட்டி வடக்கு, அளவெட்டி. — குடும்பத்தினர். [8450]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி




செல்வி
### ரூபரஞ்சினிதேவி ஆறுமுகம்

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உமது நினைவில் வாழும்;
அக்கா, அத்தான் சின்னம்மாமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

பிரம்படி, கொக்குவில். (37271)

## 3-ம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்: 12 — 07 — 1932

மறைவு: 02 — 07 — 1992

### அமரர் பண்டாரி சின்னத்துரை
[கிருஷ்ணா மோட்டோர் வேர்ஸ், கிருஷ்ணா மினியஸ் உரிமையாளர்]

திதி: 30 – 06 – 1995

எங்கள் உள்ளத்தில் நிறைந்த துரையே பப்பா! எம்மைவிட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் கழிந்தாலும் எம் மனதை விட்டு உம்மைப் பிரிய விடமாட்டோம். ஏனெனில் பப்பா! எம் உள்ளத்தில் ஒரு கோவிலை அமைத்து விட்டோர்கள். உங்கள் ஆத்ம சாந்தியடைய வேண்டி நிற்கும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செபமாலை மாதா கோயில் ஒழுங்கை, வடக்கு வீதி, உடுவில், சுன்னாகம்.

---

கொக்குவில் இந்துக் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 1995

01- 07- 1995 சனிக்கிழமை மு. ப. 9 . 30 மணி
முதன்மை விருந்தினர்
**திரு. இ. சிவானந்தன்**
(கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயம் —1)
பரிசில் வழங்கல்
**திருமதி இந்திரகுமாரி சிவானந்தன்**

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

(சி- 1715)

## மாணவர் கலைப் பூங்கா - 3

### கலைக்களம்: யாழ்/நாகர் கோயில் மகாவித்தியாலயம்

காலம்: இன்று (1995 – 06 – 30) வெள்ளிக்கிழமை

நேரம்: மாலை 7–30 மணி

### ★ நிகழ்ச்சி நிரல் ★

★ ஈகச் சுடரேற்றல்
திரு. ராஜி மாஸ்டர் அவர்கள்
(தளபதி கடற்புலிகள் யாழ்/மாவட்டம்)
செல்வி ச. ஈழத்தரசி அவர்கள்
(பொறுப்பாளர், கடற்புலிகள் [மாணவர் அமைப்பு மகளிர் பிரிவு யாழ்/மாவட்டம்)

★ அகவணக்கம்

★ தமிழ்த்தாய் வாழ்த்து
(யா/நாகர் கோயில் மகாவித்தியாலயம்)

★ வரவேற்புரை
குழையூரான் திரு. ச. மார்க்கண்டு அவர்கள்
(தொடர்பாளர், கலைபண்பாட்டு, பிரிவு, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழம்)

★ தலைமையுரை
திரு. ந. இன்பன் அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழம்)

★ தொடக்க உரை
திரு. ஜெ. அரவிந்தன் அவர்கள்
(பொறுப்பாளர், கடற்புலிகள் மாணவர் அமைப்பு, யாழ். மாவட்டம்)

★ சிறப்பு விருந்தினர் உரை
செல்வி சுகி அவர்கள்
(பொறுப்பாளர், கடற்புலிகள் மகளிர்|அமைப்பு, யாழ். மாவட்டம்)
திரு க. செல்வராசா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதங்கேணிக் கல்விக் கோட்டம்)
திரு. வே. சிலம்பரசன் அவர்கள்
(பொறுப்பாளர், அரசியல்துறை, கடற்புலிகள், யாழ். மாவட்டம்)

★ சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கல்
பிரதம விருந்தினர்
திரு. கங்கைஅமரன் அவர்கள்
(தளபதி, கடற்புலிகள், தமிழீழம்)

★ நன்றியுரை
திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள்
(இணைப்பாளர், கலை பண்பாட்டுப் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழம்)

### ★ கலைப்பூங்காவில்...

- சிறுவர் நாடகம் (யா/மணற்காடு அ. த. க. பாடசாலை)
- சாஸ்திரிய இசை (யா/நாகர் கோயில் மகா வித்தியாலயம்)
- சாஸ்திரிய நடனம் (யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)
- கிராமிய இசை (யா/புலோலி மெ மி த. க. பாடசாலை)
- கிராமிய நடனம் (யா/உடுத்துறை மகா வித்தியாலயம்)
- வில்லுப்பாட்டு (யா/யாக்கரு விநாயகர் வித்தியாலயம்)
- சமூக நாடகம் (யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்)
- வரலாற்று நாடகம் (யா/அல்வாரை அ. த. க. பாடசாலை)
- ஒரு தேடல் - நாடகம் (யா/திருமறைக் கலாமன்றம்)

கலை விருந்து காண களம் நோக்கி வாரீர்!

நன்றி.

கலைபண்பாட்டுப் பிரிவு,
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

வாழ்த்துபவர்:
**எஸ். அன்ரனி**
கடல் உணவு ஏற்றுமதியாளர்,
[illegible]
(சி-1569)

## ஓராண்டு பூர்த்தி



### திருமதி துளசியம்மா கதிரவேலு

தோற்றம்: 28-04-1910 மறைவு: 11-07-1994

ஆண்டாண்டு காலமாய் அழகு செய்த அப்பாச்சி வேண்டியதெல்லாமே விரும்பித் தந்தார் - தூண்டாத மணிவிளக்கா வெங்கள் மனங்களிலே நின்றொளிர்ந்து அணி செய்த அன்புச் சுடர்.

விஜயசிங்கம் குடும்பம்

நாவலர் றோட், யாழ்ப்பாணம். (சி/1580)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 05 — 1947

இறப்பு: 13 — 07 — 1991

அமரர்
### சுந்தரம்பிள்ளை ஆனந்தராஜா
(கண்ணியம்)

திதி: 30 - 06 - 1995

ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டு நான்கு கரைந்து விட்டதே அப்பா
துணையாகி நின்ற எம் தூண்சரிந்ததால்
துயரத்தில் மூழ்கி நித்தமும் கலங்குகிறோம் அப்பா


உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மாமா, மாமி.

கண்ணியம் வெதுப்பகம், இருபாலை. (37258)

30 - 06 - 1995 அன்று
## நினைவஞ்சலி

7ஆம் ஆண்டு 2ஆம் ஆண்டு





அமரர்
### முருகர் சின்னத்தம்பி
(சாரதி C.T.B.)
மலர்வு: 13 - 04 - 1943
உதிர்வு: 22 — 05 — 1978

திருமதி
### சின்னத்தம்பி இராஜமலர்
மலர்வு: 30 — 08 — 1945
உதிர்வு: 22 — 06 — 1993

பாசத்தின் திருவுருவாய் எமக்கெல்லாம் வழி காட்டிகளாய் வாழ்ந்து மறைந்தாலும் எம் நெஞ்சில் என்றும் மறையாது வாழும் எம் அன்புத் தெய்வங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
— பிள்ளைகள்.

குளமங்கால், மல்லாகம். (37273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மண்டைதீவு அதிரடி

மண்டைதீவில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல், கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும், சந்திரிகா — அனுருத்த உட்பட்ட உயர் அரசாங்க வட்டாரங்களுக்கும் பெரும் பேரிடியும், தலையடியுமாகும்!

நேருக்கு நேரான மூன்று மணி நேரச் சண்டையில் மண்டைதீவில் பரவிக்கிடந்த பிரதான இராணுவ முகாம் உட்பட்ட முகாம்கள், சகல காவல் அரண்கள், காவல் நிலையங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டன.

நூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் புறமுதுகிட்டு செருக்களத்தில் இருந்து தப்பி ஓடி ஒளிந்து கொண்டனர். பலர் காயமுற்றனர்.

வெற்றித் தாக்குதலின் விளைவாக பெரும் தொகையான ஆயுதங்களும் மற்றும் வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

கவச படை, கடற்படைகளின் பக்கத்துணை இன்றி ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புகள் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகக் களத்தில் மோதினால் பெறுபேறு எவ்வாறாக இருக்கும் என்பது இத் தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வீரமும் போர்த்திறனும், அர்ப்பணிப்பும் யாரிடம் நிறைந்திருக்கின்றன என்பதற்கும் இது ஓர் எடுத்துக்காட்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக போர்க்களத் திட்டங்களை நுணுக்கத்துடன் வகுப்பதிலும், நெறிப்படுத்துவதிலும் ஸ்ரீலங்காவின் நூறு பிரதம படைத் தளபதிகள் சேர்ந்து பணியாற்றினாலும் ஒரு தலைவர் பிரபாகரனுக்கு நிகர் நிற்க முடியாது; நெருங்கவும் முடியாது என்பதற்கு மண்டைதீவு அதிரடி ஒரு சின்ன அடையாளம்!

இவற்றை எல்லாம் மதிப்பீடு செய்து, கொழும்பு பாதுகாப்புத் துறையும், ஸ்ரீலங்கா அரசாங்கமும் துணுக்குற்றிருக்கின்றன; அதிர்ச்சி அடைந்திருக்கின்றன; மனம் சோர்ந்து வெதும்பியிருக்கின்றன! விடுதலைப் புலிகளை இலகுவில் பலவீனப்படுத்திவிடலாம் என்ற தமது கணிப்பு தவறானது என்பதனையும் உணர்ந்திருக்கும்.

மிகக் குறிப்பாக ஒரு வருடகாலத்திற்குள் போரில் வெற்றி கண்டு அதனை முடிவுக்குக் கொண்டு வந்து விடப் போவதாக நாடாளுமன்றத்தில் முழங்கிய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவும் — போரில் அரசின் வெற்றி அண்மித்து விட்டதாக மார்தட்டிய ஜனாதிபதி சந்திரிகாவும் — தமது தலைகளைப் பிய்த்துக் கொண்டிருப்பர்!

யாழ்ப்பாணத்தின் மீதான பெருந்தாக்குதல் அடுத்த மாத மத்தியில் நடக்கும் என்று சந்திரிகா அறிவித்திருந்தார். வடமராட்சியை, வலிகாமத்திலிருந்து வெற்றிலைக்கேணி வரையைப் பற்றி, விடுதலைப் புலிகளின் கடற்படையை முடக்கி விட்டு யாழ்ப்பாண நகரை பிடிப்பது தான் அந்தப் பெரும் தாக்குதலாக இருக்கும். மண்டைதீவினூடாக யாழ். நகருக்குள் படையெடுப்பது அதன் ஓர் அங்கம்.

யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்து விட்டால் முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றியதாகக் கூறி, போரில் வெற்றியீட்டி விட்டதாகக் காட்டுவது அரசின் திட்டமாக இருந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகள் மண்டைதீவில் நடத்திய வெற்றிகரத் தாக்குதல், தங்கள் திட்டங்கள் எப்படித் தவிடுபொடியாகி விட்டன என்பதனை அரசினருக்கு உணர்த்தி விட்டது. விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி விடுவது கடினம் என்பதைப் புகட்டி இருக்கிறது.

சந்திரிகா இதிலிருந்து பாடம் கற்பாரா?

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல; விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு அரசியல் தீர்வு காண முடியாது; தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புறக்கணித்து தாம் நினைத்த தீர்வைத் திணிக்க முடியாது என்பதனை இது போன்ற பல தோல்விகளைச் சந்தித்த பின்னர்தான் உணருவாரா?

# ஜனாதிபதி ஆட்சி முறை குறித்து
# ஐ.தே.க. நிலைப்பாடு ஞாயிறு தெரியும்

கொழும்பு, ஜூன் 30

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான ஐ.தே.கவின் நிலைப்பாடு எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்படும் என கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 1ஆம் 2ஆம் திகதிகளில் சிறிகொத்தவில் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூடவுள்ளது.

2ஆம் திகதி மாலை நடைபெறும் கூட்டம் ஒன்றில் ஐ.தே.க. தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அளித்த தேர்தல் வாக்குறுதிகளுக்கமைய ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமா, இல்லையா என்பதை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கிக் கூறுவார்.

தற்போதைய அரசமைப்பு பற்றி ஆராய்வதற்கு ஐ.தே.க. குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஜனாதிபதிவழக்கறிஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இக்குழுவில் அடங்குகின்றனர்.

இவர்களின் கருத்துகள் பற்றி அறிவதற்காக கடந்த மாதம் ஐ.தே.க தலைவர் இவர்களை சந்தித்து அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஐ.தே.கவின் தவிசாளர் ஏ.ஸி.எஸ். ஹமீத் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில்—

ஜனாதிபதி முறை ஒழிப்பும், அதிகாரப் பரவலாக்கமும் வெவ்வேறானவை ஒன்றோடு ஒன்று நேரடித் தொடர்பு இல்லாதவை.

சில அரசியல் கட்சிகள் இவ்விரு விடயங்களையும் ஒன்றாக ஆராய முடியும் எனக் கூறுகின்றன.

அது சாத்தியமாகாத விடயம். இவ்வாறு ஒரே நேரத்தில் இரு விடயங்களையும் ஆராயும் போது பிரச்சினைகள் மேலும் சிக்கலடையலாம் என்றார். (ஒ-14)

# ஜனாதிபதி முறையை மட்டுமாவது ஜூலை 15க்கு முன் நீக்க வேண்டும்

## வாசுதேவா கூறுகிறார்

தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் அமைப்பை மாற்ற முடியாத நிலை உள்ளது. இருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மட்டுமாவது இக்காலப்பகுதியில் நீக்க வேண்டும்.

இப்படிக் கூறினார் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.

இதுவே லங்கா சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடு என்றும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்குவதன் மூலம் தனிநபரிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்க முடியும்.

படை அதிகாரிகள் பலர் செலுத்தும் மேலதிகாரங்கள் கூட நாடாளுமன்றத்தை வந்தடையும்— என்றார். (ஒ-3)

## பலதரப்பட்ட நோய்களுக்காக

# யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்ட 912 பேர் மரணம்

## செப்ரிசீமியாவினால் மட்டும் 249 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த வருடம் முழுவதிலும் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட அரசினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு பலதரப்பட்ட நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் சுமார் 912 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவற்றில் செப்ரிசீமியா நோயினால் மட்டும் 249 பேர் உயிரிழந்துள்ளனர். இருதயச் சுற்றோட்ட மற்றும் இருதய நோய்களினால் -181 பேரும், மாரடைப்பினால் -85 பேரும், பிறப்பு தொடர்பானதும் ஏனைய சுவாசத் தொகுதி நோய்களினால் -73 பேரும், போசாக்கின்மையால் கரு வளர்ச்சி பாதிப்பு, முதிர்ச்சியின்மை மந்தக்கருவளர்ச்சியின்மையால் -72 பேரும் —

மூளைநரம்பு தொடர்பான நோய்களால் — -72 பேரும் நிமோனியா மற்றும் சுவாசத் தொகுதி நிமோனியாவினால் -69 பேரும், சமிபாட்டு உறுப்பு நோய்களால் -51 பேரும், மலேரியாவினால் -42 பேரும், குடல்சார்ந்த தொற்றுநோய்களால் -39 பேரும், தீவிர சுவாசத் தொற்று நோய்களால் 39 பேரும் உயிரிழந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தின் புள்ளிவிபரக் கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை சென்ற வருடத்தில் வைத்தியசாலைகளில் 5ஆயிரத்து 45 பேர் பலதரப்பட்ட நோய்கள்காரணமாக அனுமதிக்கப்பட்டு குணமாகி வெளியேறியுள்ளனர். (ஒ-4)

## ஆய்வுகூட உபகரணங்கள் வந்து சேர்ந்தன:

# கைதடி பனை அபிவிருத்தி நிலையம் ஜூலை மாத இறுதியில் செயற்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பனை அபிவிருத்திச் சபையின், கைதடி பனை ஆராய்ச்சி நிலையம், ஜூலை மாத இறுதியில் செயற்பட ஆரம்பித்து விடுமென்று, பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிலையத்தினரால் (U.N.D.P.) பனை அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட 1 கோடியே 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தொழிற்சாலை இயந்திரங்கள், 3 கோடி ரூபா பெறுமதியான ஆய்வுகூட சாதனங்கள், பரிசோதனைக் கருவிகள் என்பன தற்போது கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் திரவத்தை தூளாக (பவுடராக) உலர்த்தும் ஆய்வுகூட சாதனம், கள்ளில் இருந்து ஈஸ்ற் உற்பத்தி செய்யும் சாதனம், ஒரு மணித்தியாலத்தில் 2 ஆயிரத்து 700 பொலீத்தீன் பைக்கற்றுகளில் கருப்பநீரை (பதனீரை) பொதி செய்யும் சாதனம் போன்ற சாதனங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றை இயக்குவதற்கு 10 கே.வி.ஏ. வலுகொண்ட ஜெனரேற்றர் தேவைப்படுகின்றது. எனினும் 5கே.வி.ஏ. வலு ஜெனரேற்றரையே எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது. (ஒ-5-4)

# வவுனியாவுக்கும் மருந்து அனுப்ப பின்னடிப்பு

கொழும்பு, ஜூன் 30

வவுனியா வைத்தியசாலைகளுக்கு மருந்துவகைகள், ஆய்வுகூட மருந்துகள், இரசாயனப் பொருள்கள். இரசாயன உபகரணங்கள் என்பவற்றை வழங்க, சுகாதார அமைச்சின் மருந்துகள் விநியோகப்பிரிவு அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இவற்றை வவுனியாவுக்குக் கொண்டுசெல்ல, பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அலுவலகத்தில் இருந்து, எழுத்து மூலமான அனுமதியை பெற்றுவருமாறும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## ப. நோ. கூ. சங்கக் கிளையில்

# உலர் உணவுப் பொருள்கள் நிறை குறைத்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

திவகத்தைச் சேர்ந்த ப.நோ.கூ. சங்கக்கிளை ஒன்றில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுபொருள்கள் நிறைகுறைத்து விநியோகிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கக்கிளையில் உலர் உணவுப்பொருள்கள்குறைத்து விநியோகிக்கப்பட்டு வருவது குறித்து யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் பகுதிக்கு எழுத்து மூலமான முறைப்பாடுகள் பாவனையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்தன என்றும்—

இதையடுத்து செயலக நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் திரு. கே. ஜே. ரூபேந்திரன் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது இந்த முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டது. என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் இடம்பெயர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களில் 28 கிலோ கிறாம் அரிசிக்கு 800 கிறாம் அரிசி குறைவாக நிறுத்து விநியோகிக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

நிறுத்தல் அளவை உபகரணம் முத்திரையிடப்பட்டிருந்த போதிலும் நிறையை குறைத்து விநியோகித்த சம்பந்தப்பட்ட சங்கக்கிளை முகாமையாளர், விற்பனையாளர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

## தேவாலயம் புனரமைப்பு

தென்மராட்சி, ஜூன் 30

பளை நகரப் பகுதியில் பல காலமாக இயங்காமல் இருந்த நூற்றாண்டு கால பழமை மிக்க அங்கிலிக்கன் திருச்சபை தேவாலயம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இத் தேவாலயத்தின் நூற்றாண்டு விழாவும் உற்சவமும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)

## உதவிக்கடன்

தென்மராட்சி, ஜூன் 30

தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் பளை, புலோப்பளை, இணாவில், இந்திராபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த ... சுயசார்பு உதவிக் கடனாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. (க-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

30-06-1995

வெள்ளி இரவு

- ★ 8-02 — மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி வேலணையூர் சுரேஷ் எழுதிய 'நெஞ்சில் நிலைத்த நினைவுகள்'
- ★ 8-25 — கணப்பொழுது — சி. கண்ணம்மா எழுதிய லெப்ரினன்ட் அனித்தா
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம்
- ★ 8-50 — ஏர்முனை— ''சேரளம்'' குறுநாடகம்

01-07-1995

சனி காலை

- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — கணநேரக்காவியங்கள்
- ★ 5-30 — மண்ணின் குரல்
- ★ 5-40 — நேயர் கடிதங்கள்
- ★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — நாடகம்: பொம்பிளை பார்க்கப்போறம் அங்கம் - 08
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள், தொடர்ந்து என் தெரிவு

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30

இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், பெற்றார் தினமும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. இரத்தினராசா கலந்து கொள்வார். திருமதி யோ. இரத்தினராசா பரிசில்களை வழங்குவார். (ஒ)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 30

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பரிசில்நாள் விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. மு. நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ராஜன் கதிர்காமரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கமும் கலந்து கொள்வர். (ஒ-117)

★ ★ ★

இமையாணன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். (ஒ-155)

## காலியில் 75 அகதிகள் இன்னும் தஞ்சம்

கொழும்பு, ஜூன் 30

காலியில் இடம்பெற்ற வன்செயல்களின் பின் இடம் பெயர்ந்து இந்துக் கோயிலில் தஞ்சம் அடைந்திருந்த 300 பேரில் 75 பேர் தொடர்ந்து அங்கு தங்கியிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-3)

## திருடப்பட்ட இரு மாடுகள் மீட்பு!

தென்மராட்சி, ஜூன் 30

மிருசுவில் கெற்பலிப் பகுதியில் திருடப்பட்ட இரண்டு மாடுகள், யாழ்ப்பாணத்தில் பளை காவல்துறையினரால் மீட்கப்பட்டது.

இறைச்சிக்காக கொல்லப்படும் முன் பரிசோதனைக்கு கட்டப்பட்டிருந்த சமயம், இந்த இரு மாடுகளும் மீட்கப்பட்டன. (ஒ-117)

## தெரிந்தவர் போல் நடித்து

# கிளாலி ஊடாக வந்தவரின் பணம், உடைமை சூறை!

## வன்னி வாசிக்கு ஏற்பட்ட அனுபவம்

தென்மராட்சி, ஜூன் 30

வன்னியில் இருந்து கண்சத்திர சிகிச்சை செய்து கொள்வதற்காக யாழ். போதனாசாலைக்கு வந்து கொண்டிருந்தவரை ஏமாற்றி அவரிடம் இருந்த சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க பணம், பொருள்கள் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இது பற்றி தெரிவிக்கப்படுவதாவது:

வவுனியா சேமமடு பகுதியிலிருந்து கிளாலி ஊடாக யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த ஒருவரை அணுகி தெரிந்தவர் போல் காட்டிக் கொண்ட இருவர் தாம் அவரை யாழ்ப்பாணம் கூட்டிச் செல்வதாக கூறியுள்ளனர்.

கெற்பலி கேடில்ஸ் நகரை அண்மித்த காட்டுப் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது மேற்படி வவுனியா வாசியைத் தாக்கிய இருவரும் அவருடைய உடைமைகளை பறித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3-30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக பளை காவல் துறையினர் விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதமும் கிளாலி ஊடாக வந்த வியாபாரி ஒருவர் கச்சாய் பகுதியில் தாக்கப்பட்டு அவரிடம் இருந்த பணமும் கொள்ளையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-14-117)

# வெள்ளவத்தை வீதிகளில் ராணுவம் திடீர் சோதனை

கடந்த திங்கட்கிழமை வெள்ளவத்தையில் இராணுவத்தினர் திடீர் சோதனைகளை நடத்தினர்.

நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெள்ளவத்தை சந்தியில் திடீரென இறங்கி குறுக்கு வீதிகளில் 'பரா' நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

வீதியில் போவோர், வருவோரைகாலை 6 மணி முதல் பகல் ஒரு மணிவரை படையினர் சோதனையிட்டனர்.

எவரும் கைது செய்யப்படவில்லை. (ஒ-3)

# கண்டி மாணவர்களுக்கு குண்டு பற்றி விளக்கம்

## பொலீஸார் வழங்கி வருகின்றனர்

கைக்குண்டுகள், கிரனேட்டுகள், ஜெலிக்னைற்றுபோன்ற வெடிப்பொருள்கள் தொடர்பான அறிவுரைகள் கண்டி பொலீஸார் அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு அளித்து வருகின்றனர்.

நாட்டில் பயங்கரவாத சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

வெடிகுண்டுகள், மக்கள் கூடும் இடங்களில், பாடசாலைகளில் அல்லது பாதைகளில் விஷமிகளால் வைக்கப்படலாம்.

—இவ்வாறு பொலீஸார் மாணவர்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

அத்துடன் சுயபாதுகாப் முறைகளையும் மாணவர்களுக்கு விளக்கி வருகின்றனர்.

இவ்வாறான வெடிப் பொருள்கள் எவற்றையாவது கண்டால் பொதுமக்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்துவதுடன் தமக்கு அதுபற்றி உடனடியாக அறிவிக்க வேண்டும் எனவும் பொலீஸார் அறிவுறுத்தினர். (ஒ-5)

## தாக்குதல குறித்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தெளிவாகக் காட்டுகிறது.

''மண்டைதீவுத் தாக்குதலின் முக்கியத்துவம் என்ன?'' என்ற தலைப்பில் பி.பி.ஸி தமிழோசையில் ஒலிபரப்பான கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.பி.ஸி கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மண்டைதீவில் பாதுகாப்பு பலவீனமாக இருந்தது என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் மண்டைதீவில் இருந்தே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் மீது தாக்குதல் நடத்த ராணுவம் திட்டமிட்டு வந்தது என்று கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடுமையான தாக்குதல்கள் நடத்தப்படும் என்று ஊகங்களும் — சில சமயங்களில் வெளிப்படையான அறிவித்தல்களும் வெளியாகிக் கொண்டிருந்தவேளையில் இத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தியுள்ளனர்.

கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் தாங்கள் பெரும் தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக வெளிப்படையாகக் கூறிவந்தனர்.

மேலை நாடுகளில் இருந்து ஆயுதங்கள் வந்து சேர்வதற்காகத்தான் அரசு காத்திருக்கிறது என்று தெற்கின் செய்தித்தாள்கள் கூறின,

### புலிகள் முந்திக் கொண்டனர்

ஜூலை மாதம் இந்த மாபெரும் இராணுவத் தாக்குதல் நடக்கலாம் என்று கூறப்பட்டது.

இவ்வாறு இராணுவம் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கவே புலிகள் மண்டைதீவு மீது முந்திக் கொண்டு தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இதன் மூலம் இராணுவம் நடத்த இருக்கும் தாக்குதலைத் தடுக்க முடியாவிட்டாலும், தாமதப்படுத்தலாம் என்பது நோக்கமாக இருக்கலாம்.

இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதங்களின் எண்ணிக்கை பெரும் தாக்குதலுக்குத் தயாராகி வரும் படையினரின் உற்சாகத்துக்குப் பெரிய அடியாக விழுந்துள்ளது. அத்துடன் இது விடுதலைப் புலிகளின் பலத்தைக் காட்டவும் உதவியிருக்கிறது.

ஒன்று புலிகளை எதிர்த்துப் போராட அவர்களிடம் ஆயுதம் இல்லை. அல்லது விடுதலைப் புலிகளின் ஆற்றல் அவர்களை அப்படியே அமுக்கி இருக்கவேண்டும்.

காரணம் எதுவாக இருந்தாலும் இத்தாக்குதலுக்குப் பின் இராணுவம் திறமை அற்றதாக வெளிப்பட்டுள்ளது.

இது அரசுக்கு நல்ல செய்தியாகப்படவில்லை.

### உத்தியை மறுபரிசீலனை செய்யும் நிலை

இராணுவம் விடுதலைப் புலிகள் மீது நடத்த திட்டமிட்டுள்ள தாக்குதலின் நோக்கம் அவர்களைப் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தைக்கு வரும்படி செய்வதுதான் என்று அரசு கூறுகிறது.

ஆனால் இத்தாக்குதலின் பாதிப்பால் இராணுவம் ''அமைதிக்கான போர்'' என்ற தன் உத்தியை மறுபரிசீலனை செய்யவேண்டி இருக்கும்.

விடுதலைப் புலிகளை தமிழர்களிடமிருந்து அந்நியமாக்குவது அரசின் மற்றொரு நோக்கம்.

அதுவும் இப்போது மிகவும் கடினமாகி விட்டது. குண்டு போடுவதாலும், ஷெல் வீச்சு நடத்துவதாலும் விடுதலைப் புலிகளை — ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு உறுப்பினரைக் கொண்ட புலிப்படையினரை — தமிழ்மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த முடியுமா என்பது சந்தேகமே.

இதுவரை 50 ஆயிரம் உயிர்களைப் பலி கொண்ட இனப் போர் முடிவுக்கு வரக் கூடிய வாய்ப்பு ஏப்பிரல் 19 ஆம் திகதிக்குப்பின் — போர் இடைநிறுத்தம் முறிவடைந்தபின்— பழையபடி எட்டாக்கனி ஆகி விட்டது.

மண்டைதீவு சண்டையில் எவர் வெற்றி பெற்றாலும் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்திருப்பதும் முடிவற்ற இந்தச் சண்டைக்குத் தீர்வு காண நேர்மையான முயற்சி தேவை என்பதையே காட்டுகின்றது.

இப்படி பி.பி.ஸி கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

# குழந்தைகள் விபசாரம் இந்தியாவுக்கு முதலிடம்

மணிலா, ஜூன் 30

உலகிலேயே குழந்தைகளை விபசாரத் தொழிலுக்கு பயன்படுத்தும் நாடுகளில் முதலிடம் வகிக்கும் நாடு இந்தியா.

14 வயதுக்கு குறைவான 23 லட்சம் குழந்தைகள் வறுமையின் காரணமாகவும்—

பெற்றோரின் புறக்கணிப்பு காரணமாகவும் — இந்த சூழலுக்கு தள்ளப்படுவதாக ஆய்வாளர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-3)


உ

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

(30-06-95)



### செல்வி சானுகா சத்தியரூபன்

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சத்தியரூபன்-விஜயகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சானுகா தனது முதலாவது பிறந்தநாளை கஸ்தூரியார் வீதியிலுள்ள தனதில்லத்தில் இன்று குதூகலமாக கொண்டாடுகின்றார்.

சானுகாவை அம்மா, அப்பா, அக்கா சயானி, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, மாமாமார், சித்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அண்ணன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள், மீனாட்சியம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்,

(சி/1576)


# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு:

# புதிய காலக்கெடு ஒன்றை வழங்குமாறு சந்திரிகாவுக்கு கட்சிகள் நெருக்குதல்

கொழும்பு, ஜூன் 30

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு அரசு குறித்துள்ள ஜூலை 15 காலக்கெடு நெருங்கும் இவ்வேளையில்—

அந்தக் காலக்கெடுவுக்குள் நீக்க முடியாது விட்டால் புதிய காலக்கெடு ஒன்றை அறிவிக்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்குதல் கொடுத்துவருகின்றன.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஜூலை 15க்கு முன் நீக்கவதாக மக்களுக்கு அளித்த உறுதி மொழியை அரசு செயல்படுத்தாவிட்டால் அரசு மீது மக்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மையை இழக்க வேண்டி ஏற்படும் என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

காலக்கெடுவை ஒருசில மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி முன்வந்தால் அதற்கு தாம் ஆதரவு தருவோம் என்றும் அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதை காலவரையறை இன்றி ஒத்திவைத்தால் அரசின் மீது மக்கள் வைத்த நம்பிக்கையை இழக்க நேரிடும் என்று இக்கட்சிகள் சுட்டிக்காட்டி உள்ளன.

## அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமாகாண அதிபர்கள் சங்கம் வருடம் தோறும் நடத்தும் கலந்துரையாடலும் பொதுக்கூட்டமும் நாளை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள அதிபர்களும், வலயக் கல்விப்பணிப் பாளர்களும், கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் பங்குபற்றுவர். (உ)

## சுண்டிக்குளியில் கலைப் பொழுது

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிதிக்காக தமிழ் மன்றம் நடத்தும் "கலைப் பொழுது" நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3 மணிமுதல் நடைபெறவுள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் பல்வேறு சுற்றுப் போட்டிகளில் இன்று பிற்பகலில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இணுவில் அண்ணா அணியை எதிர்த்து கலாஜோதி அணி மோதும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் வடமராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்—

★ 3.30 மணி:- நக்கீரன் அணி எதிர் ஞானம்ஸ் அணி.

★ 4.30 மணி:- கழுகுகள் அணி எதிர் கண்ணகி அணி.

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் வலி. கிழக்கு வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்—

★ 4.00 மணி:- சென். மேரிஸ் அணி எதிர் கலைவாணி அணி.

★ 5.00 மணி:- விண்மீன் அணி எதிர் வெடி அணி. (உ)

## ஈழப்போரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் திரன், "3லட்சம் தமிழர்கள் அமெரிக்காவில் வாழ்கிறார்கள். 1 கோடி யூதர்கள் இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பது போல இவர்கள் ஈழம் தமிழர்களுக்கு ஆதரவான ஒரு குழுவாக அமையலாம் என்றுகூறினார்.

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் பிராங் ஜி. விஸ்னர் சென்னையில் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின் எதிரொலிப்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளை மிக, மிகக் கவனமாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட நாம் உதவி புரிவோம் என்று அமெரிக்கத் தூதர் கூறியிருந்தார். (க)

## வித்துடல்கள் தாங்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படும்.

முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல் துறை மாவட்டச் செயலகத்தில் இருந்து ஊர்திப் பவனி ஆரம்பமாகும்.

யாழ். நகரின் பல பகுதிகள் ஊடாக முற்பகல் 11.20 மணிக்கு ஊர்திப் பவனி சாவகச்சேரியைச் சென்றடையும்.

பின்னர் அங்கிருந்து கொடிகாமம், எழுதுமட்டுவாள் ஊடாக பிற்பகல் 12.50 மணிக்கு நாகர்கோவிலைச் சென்றடையும்.

பின்னர் ஊர்தி பருத்தித்துறை பஸ் நிலையம் ஊடாக பிற்பகல் 2.40க்கு வல்வெட்டித்துறையைச் சென்றடையும்.

தொடர்ந்து ஊர்தி உடுப்பிட்டி, நெல்லியடி, புறாப்பொறுக்கி, அப்புது, கலகம்புளியடி ஊடாகச் சென்று புத்தூரை நோக்கித் திரும்பும்.

அங்கிருந்து கோப்பாய் கல்வியங்காடு நல்லூர் ஊடாக பிற்பகல் 5 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தை வந்தடையும்.

பின்னர் அங்கிருந்து பலாலி வீதி வழியாக திருநெல்வேலி, கோண்டாவில் சந்தி, இருபாலை வீதி, இராசா வீதி ஊடாக ஊர்தி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் செல்லும்.

அங்கு மாலை 6 மணிக்கு சகல இராணுவ மரியாதைகளுடன் வித்துடல்கள் புனித விதை குழியில் விதைக்கப்படும். (ஐ)

## சிறந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி தெரிவித்தது.

மண்டைதீவில் நடந்த பெரும் தாக்குதல் இராணுவத்துக்கு கொடுக்கப்பட்ட பலத்த அடி என்று சில விமர்சகர்களும், பத்திரிகை ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர் என்றும் அது தெரிவித்துள்ளது. (இ-3)

## போர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவு ஏரியைக் கடந்து சென்று இத்தாக்குதலை நடத்தி உள்ளனர்.

இது ஒரு நேரடித் தாக்குதல்.

சண்டை நேருக்கு நேர் நடைபெற்றது.

இப்படி பிரிகேடியர் சரத் முனசிங்கா மேலும் தெரிவித்தார். (இ-4)

## ஆலயங்களில்

கொக்குவில் ஸ்ரீசாயி தர்க்கா தேவி ஆலய அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

★ ★ ★

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக் கோல திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

★ ★ ★

அரசடி வீதி கந்தர் மடம் செல்வ நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும். (ஒ-14)

## பல்கலைக்கழக மாணவர்கள் இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். போதனா வைத்திய சாலை ரத்த வங்கிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 100 பைந்து இரத்தம் வழங்கினர்.

மண்டைதீவு தாக்குதல் நடைபெற்ற நேற்று முன்தினம் புதன்கிழமை அவர்கள் இந்த இரத்த தானத்தைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## படையினர் சூடு மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி படையினர் குறிபார்த்துச் சுட்டதில் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

மண்டைதீவு — சிறுத்தீவு கடற்பரப்பில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

குருநகரைச் சேர்ந்த இம்மானுவேல் அனுஷன் (வயது 18) என்ற இளைஞனே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## மண்டைதீவு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைம்பது படையினர் வரை உயிரிழந்ததாகத் தெரிவித்தன.

இரு அதிகாரிகள், 90 சிப்பாய்கள், இராணுவத்துக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த இரு பொதுமக்கள் உட்பட படையினர் தரப்பில் 130 பேர் உயிரிழந்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதலில் 126 படையினர் கொல்லப்பட்டனர் என்றும், 20 சிப்பாய்கள் காணாமற்போயினர் என்றும் 33 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி "ரோய்ட்டர்" செய்தி நிறுவனம் அறிவித்தது.

குறைந்தது 99 இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும், மேலும் 26 பேரைக் காணவில்லை என்றும் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

84 படையினரும், நான்கு ஊழியர்களும் கொல்லப்பட்டதாகவும்—

36 படையினர் காயமுற்றதாகவும்—

இலங்கை வானொலி அறிவித்தது. (உ-ஐ-3-14)

## விசாரணைக்கு சென்றார் பிரியங்கா

ஜெயின் கமிசன் விசாரணையை நேரில் பார்ப்பதற்கு ராஜீவ் காந்தியின் புதல்வியான பிரியங்கா காந்தி கடந்த திங்களன்று விசாரணை நடைபெற்ற இடத்துக்குச் சென்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

தனது தந்தையின் கொலை வழக்கு விசாரணையை நேரில் பார்க்க பிரியங்கா சென்றது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதாக புதுடில்லி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## பாதுகாப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறியடிப்பதற்கு போதிய முன்னேற்பாடுகளைச் செய்து அதனை ஒத்திகை பார்த்திருக்கக் கூடமுடியும்.

கேள்வி:- இந்தத் தோல்விக்கு இராணுவத் தலைமையா அல்லது துருப்புகளின் மனோபலம் இன்மையா அல்லது அவர்களது நம்பிக்கையீனமா காரணமாக இருந்திருக்கும்?

பதில்:- அரசியல் தலைமைத்துவம் முடிவு காண வேண்டிய விடயம் இது. தற்போதைய சண்டை தொடங்கிய பின்னர் இராணுவம் தொடர்ந்து இழப்புகளைச் சந்தித்து வருகின்றது. இதே நிலை தொடர்வதை அனுமதிப்பதா என்பது குறித்து தீர்மானிப்பதே அரசு தற்போது எதிர்நோக்கும் மிக நெருக்கடியான பிரச்சினையாகும்.

கேள்வி:- மண்டைதீவுத் தாக்குதலினால் பெரும் அரசியல் தாக்கம் ஏற்படுமா?

பதில்:- என்ன நடந்தது என்பதற்கு எந்த விளக்கமும் இன்னும் தரப்படவில்லை.

அரசின் தவறு இது என்ற பாணியில் — இராணுவத் தலைமைப் பீடத்தை உரிய முறையில் கையாள அரசு தவறிவிட்டது என்று தெரிந்து — அறிக்கை ஒன்றை வெளியிட எதிர்க்கட்சி தயாராகி வருகின்றது.

அதற்கு மேல் எதிர்க்கட்சி எந்த எதிர்ப்பையும் காட்டமாட்டாது என நினைக்கிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் இராணுவத்தை விமர்சிப்பது தேசப்பற்றின்மையைக் காட்டுவதாக இருக்கும் என சில அரசியல் கட்சிகள் கருதுவதால் அவை இந்தக்கட்டத்தில் இராணுவத்துக்கு எதிராக விமர்சனம் எதையும் வெளியிடமாட்டா எனக் கருதுகிறேன்.

கேள்வி:- விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட திறமைமிக்க இராணுவ நடவடிக்கை இது எனக் கூறலாமா?

பதில்:- சிறப்பாக ஒருமுகப்படுத்தப்பட்ட—மிகத் திறமையாகச் செயற்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை இது என்பதை ஸ்ரீலங்கா இராணுவமே ஒப்புக்கொண்டுள்ளது.

மிகவும் பாதுகாப்பு வழங்கப்படும்— தீவிர காவல் உள்ள — முகாம் ஒன்றுக்குள் தாம் விரும்பிய எதனையும் புலிகளால் செய்யமுடியும் என்பது இத்தாக்குதல் மூலம் சந்தேகத்துக்கு அப்பால் தெளிவாகியுள்ளது என்றார். (உ-3)


## யா/இணுவில் மத்தியகல்லூரி

வருடாந்த

## பரிசளிப்பு விழா - 1995 பெற்றார் தினம்

காலம்: இன்று (1995-06-30) வெள்ளி மாலை 5.00மணி

இடம்: கல்லூரித் திறந்தவெளி அரங்கு (சரஸ்வதி கலையரங்கம்)

தலைவர்: திரு மு திருஞானசம்பந்தபிள்ளை [அதிபர்]

பிரதமவிருந்தினர்: திரு. க. இரத்தினராசா (பிரதிக்கல்விப்பணிப்பாளர், உடுவில்)

பரிசுவழங்குபவர்:

திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றார்,

இணுவில் மத்தியகல்லூரி, சுன்னாகம். (37286)

## கணக்குப் பதிவாளர் தேவை

யாழ். நகரில் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு விற்பு வரவு க/கு சிட்டைக்கணக்கு, நிர்வாகத் திறமையுடைய கணக்குப் பதிவாளர் தேவை.

சகல விவரங்களையும் குறிப்பிட்டு 07-07-1995 இற்குப் பிந்தாமல் உங்களது விண்ணப்பங்களைத் தபாலில் சேர்க்கவும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

நந்தவனம்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

(37274)

## வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவு தினமும்

காலம்: இன்று (30-06-1995) வெள்ளிக்கிழமை மு. ப. 9-30மணி

இடம்: கல்லூரி மண்டபம்

முதன்மை விருந்தினர்:

திரு. இ. சிவானந்தன்
கல்விப்பணிப்பாளர் வலயம் -1

திருமதி இந்திரகுமாரி சிவானந்தன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,

[சி/1578]

## திருமறைக் கலாமன்றம்

## கவின் கலைகள் பயிலகம்

## SCHOOL OF FINE ARTS

## ஐந்தாம் ஆண்டு விழா

திருமறைக் கலாமன்ற அரங்கில் தினமும் மாலை 6-45 மணிக்கு

| 01 - 07 - 1995 (சனி) | 02 - 07 - 1995 (ஞாயிறு) |
|---|---|
| தலைமை: பேரா. செ. சிவஞானசுந்தரம் (நந்தி) | தலைமை: சங்கீத பூசணம் பொன். சுந்தரலிங்கம் |
| சிறப்புரை: செம்பியன் செல்வன் | சிறப்புரை: S. சிவலிங்கராஜா M. A. |
| ★ சிறப்பு நிகழ்ச்சி ★ கிற்றார் இசை | ★ சிறப்பு நிகழ்ச்சி ★ நடனம் |

★ கலை நிகழ்ச்சிகள் ★

பிரவேசம்:- இலவசம்

ஆசனம் வேண்டுவோர் முன் கூட்டியே அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்

கவின் கலைகள் பயிலகம்

223, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வடிவமைப்பு VIMA

விளம்பர அன்பளிப்பு:

அல்டி ALDI

மணிக்கூடு, றேடியோ விற்பனையாளர்கள்

269/1. [illegible] யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பூலோகநாதன் (இராசலிங்கம்)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பூலோகநாதன் [இராசலிங்கம்] அவர்கள் 27-6-95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - அமிர்தம் தம்பதிகளின் அன்பு மகனும், வேலணையைச் சேர்ந்த தவயோகத்தின் அன்புக்கணவரும், கோபாலபிள்ளை-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாவதி, செல்வானந்தம், சிவலிங்கராஜா (முன்னாள் தீவுப் பகுதி தனியார் போக்குவரத்துச் சபை நேரக் கணிப்பாளர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லத்துரை, செல்வநாயகி, மகாலக்ஷ்மி, பாலச்சந்திரன் (சுவிஸ்), ரதி (சுவிஸ்), இராசமலர், இந்திராதேவி (சுவிஸ்), வதனி, ரகு ஆகியோரின் மைத்துனரும், சூரியன் [பிரதான தபாற் கந்தோர் - யாழ்ப்பாணம்), சோதிலிங்கம் (கணக்காய்வாளர், கொழும்பு), சீதாலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதி, உஷா, ஆதீபன், ஆரணி, தமிழினி, புண்ணியவதி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (29-6-95) கொழும்பில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சூரியன்
[மருமகன்]

இல. 10, 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(87299)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org